## கவிஞர் உ.ஷே. தாஹிர் பாஷா



உடுமலைபேட்டையை பூர்வீகமாகக் கொண்ட இவர், சென்னையை வாழ்விடமாக கொண்டு, வாழ்ந்து வருகிறார். சென்னை சுங்கத்துறையின்கண் பணிபுரிந்து, பணி ஓய்வு பெற்று வாழ்ந்து வருகிறார். இவரது தாய் மொழி தமிழாயினும், வீட்டில் மரபு மொழியாகப் பேசுவது உருது. அற்றை நாளில், அரசு சார்ந்த பள்ளியில் படித்ததாலும், தமிழ் வழியில், தமிழையும் ஒரு பாடமாகக் கொண்டு படித்ததாலும், இவரிடத்து, தமிழ் மொழியின் பால் ஒர் ஈடுபாடு உண்டாயிற்று. அதன் அடிப்படையே தோன்றுவன எல்லாவற்றையும் பதிப்பிக்கும் எண்ணம் வளர்ந்து, அதுவே, கவிதையாயும் வெளிப் படத்தொடங்கியது. இவர் சிறப்பாக சிலச் சிறுகதைகளும் எழுதியுள்ளார். இவரது, படைப்புகள் அவ்வபோது, இவரது நண்பர்களால் நடத்தப் பெற்ற **சுங்கமுரசு** எனும் அலுவலத் தனிச்சுற்று இதழில் வெளிவந்துள்ளன. இவருக்கு வியத்தகு, படைப்பாற்றலும் கற்பனைச் சக்தியும் உண்டு. ஒரு முறை, இந்திய வருவாய்த்துறை சார்பில் நடைபெற்ற கலாச்சாரப் போட்டி நிகழ்வுக்கு ஒரு நாடகம் தேவைப்பட அதனை, பத்தே மணித்துளிகளில், உரையாடலுடன் எழுதித் தயார் செய்துக் கொடுத்தார். அது, தென் மண்டலத்தின் சார்பில் தேர்வு செய்யப் பட்டது. இவருக்கு காலமும் சூழலும் வாய்க்கப் பட்டிருந்தால், திரைத் துறையில் இவரால், கால் பதித்து கோலோச்சி இருக்க முடியும். இன்னும் தோன்றும் போதெல்லாம் எழுதி வருகிறார். அத்தகையக் கவிதைகளே இங்கு இடம் பெறுகின்றன.


# ஒரு தந்தையின் தாலாட்டு



பொங்கும் புன்னகையால் பூ வாள வந்தவனே!
ஏங்கும் உள்ளத்துக்கு மருந்தாக நின்றவனே!
பெற்றெடுக்கும் பேறு பெறாமல் போனேனே!
தாயாக நானிருந்தால் தப்பாமல் பெறுவேனே!

சேயாக நீ பிறந்த நாள் முதலாய் சோர்வெல்லாம் பறந்ததடா!
எட்டி விடும் ஓர் உதைக்கே எனது உள்ளம் ஏங்குதடா!
தொட்டுவிடும் போதினிலே தொலைத்த இன்பம் திரும்புதடா!
கட்டி அணைத்திடவே கையெல்லாம் துடிக்குதடா!

சொந்தங்கள் பல நூறு என்னோடு இருந்தாலும்,
வசந்தங்கள் என்னாளும் உன்னோடு இருப்பதாலே!
நெஞ்சோடு உனையணைத்துத் தாலாட்டு பாடிடுவேன்!
அஞ்சாத நெஞ்சோடு அயர்ந்தே தூங்கடா!



# மனிதாவெளிச்சத்துக்கு வா!



சாராய சகவாசம் சந்தோசம் தந்தாலும்
சாக்காடு கொண்டு போகும் - அது
சமுதாய வாழ்விலே சரிவினை உண்டாக்கித்
துன்பங்கள் உண்டு பண்ணும் - பல

இல்லங்கள் கெட்டதும் அல்லல்கள் பட்டதும்
இந்தக் குடியினாலே - இதை
அறிந்துமே வாழ்விலே அகன்றே வாழாதான்
வாழ்விலே இன்ப மில்லே!

சரித்திரம் படைத்திட்ட சாத்வீக நாட்டிலே;
சாராயம் பெருக லாமா! - அட
தரித்திரம் படைத்தோரே சற்றேச் சிந்தித்தால்
சந்தோசம் பெருக்க லாமே! - நீர்



கட்டிய மனைவியும் கண்ணான பிள்ளையும்
கண்ணீரில் வீழ லாமா? - அவர்
பொன்னான கனவுகள் உல்லாச நினைவுகள்
பொசுங்கியேப் போக லாமா?

சாராய அரக்கனை ஒழித்தே வாழ்ந்திட்டால்,
சஞ்சலங்கள் தீர்ந்து போகும்! - மக்கள்
வாழ்விலே நிம்மதி வளமான செல்வங்கள்;
ஒன்றாக வந்து சேரும்! - பின்

நாட்டிலே அமைதியும் நல்ல வளங்களும்
நிறைவாய்க் குடி கொள்ளுமே! - அந்த
வல்லோன் இறைவனின் வலிய அருளாசி
நம்மை யெல்லாம் காக்குமே!





1992— சுங்க இல்ல மனமகிழ் மன்ற மலர்

# சிங்காரச் சென்னை

எல்லாமுண்டு!    எல்லாமுண்டு!
எல்லாமிங்கே நிறைவாயுண்டு!
வானைத்தொட்ட கோபுரமுண்டு!
மனதைத்தொட்ட அரங்கமுண்டு!

கண்ணைக்கவரும் மின்னொளியுண்டு!
மனதைக்கவரும் காரிகையுண்டு!
உண்ணும்கடைகள் வகையாயுண்டு!
உடுத்தும் கடைகள் வளமாயுண்டு!
சீறிச்செல்லும் கார்களுண்டு- அதில்,
சாய்ந்துச் செல்லும் பெருந்தனருண்டு!
எல்லாமுண்டு எல்லாமுண்டு!



எல்லாமிங்கே நிறைவாயுண்டு!
பள்ளிச்செல்லா பிள்ளைகளுண்டு
பசித்து அழும் மழலைகளுண்டு
வேலையில்லா வாலிபருண்டு
வெம்பிச்சாகும் கன்னியருண்டு

ஓட்டைச்சட்டி ஒழுகும் வீடு
அதுவுமில்லா ஏழையருண்டு
எல்லாமுண்டு எல்லாமுண்டு
எல்லாமிங்கே நிறைவாயுண்டு



சாலையோரம் பாயில் படுத்து,
வருடந்தோரும் பிள்ளை பெற்று;
காயும் வெயிலில் தானும் காய்ந்து,
தன்னால் வந்த பிள்ளையும் காய,

நோயில் வீழ்ந்து சாவில் முடியும்;
ஏழை மாந்தர் கூட்டமுண்டு!
எல்லாமுண்டு எல்லாமுண்டு!
எல்லாமிங்கே நிறைவாயுண்டு!

## அறிக!



மனிதனில் மனிதமும் மனிதனில் மிருகமும்
மறைந்தே வாழ்ந்திடல் உலகம் அறிந்ததே!
நன்மையும் தீமையும் பிரித்திட அறிந்திடல்
உண்மையில் தேவையே உலகினில் வாழ்ந்திட!
இருமுகம் படைத்திட்ட இதயமிலா மனிதரை
இனம் காணச் சில வழி இயம்பிட விழைகிறேனே!

வேறு-

கூடிடுவார் குலவிடுவார் குற்றங்குறை கண்டிடுவார்-உதவி
நாடி வரும் நண்பரையும் நயமாக ஒதுக்கிடுவார்
கேடு தரும் செயலினிலே கேளிக்கை கண்டிடுவார்- நன்மை
தேடித் தரும் நறசொல்லை வீனென்று விலக்கிடுவர்
உள்ளாரைக் கண்டிட்டால் உறவன்று சொல்லிடுவார்–பணம்
இல்லாரைக் கண்டிட்டால் பகையன்று ஓடிடுவார்!
உதட்டிலே நகைத்திடுவார் உள்ளத்தால் பகைத்திடுவார் - பொய்
சொல்லாலே என்றும் பிழைத்திருக்க எண்ணிடுவார்-
வலியானை எந்நாளும் தலையென்று வணங்கிடுவார்
எளியானை எந்நாளும் துரும்பென்று வதைத்திடுவார்

வேறு


அறிந்திடு புரிந்திடு அறிவினில் தெளிந்திடு
அன்பையே அளித்திடு அன்பையே பெற்றிடு
அழிவுறும் உலகினில் அமைதியைக் காத்திடு
ஆண்டவன்என்றும் அருளாசி தருவானே!






# வாழ்க்கை!

ஒன்றாய்ச் சேர்ந்து
பிறப்பதில்லை
ஒன்றாய்ச்  சேர்ந்து
இறப்பதில்லை– இடையில்,
வந்ததோர் பந்தமிது
சரியாய் நமக்குப்
புரிவதில்லை!



அன்பாய்க் கடந்த
காலமதை  அறிவால் நாமும்
அழித்து விட்டோம்!
பகையாய்க் கடந்த
காலமதை மனதில் நிலையாய்,
நிறுத்திக்  கொண்டோம்!




ஒன்றாய்ச் சேர்ந்து
வாழ்ந்ததெல்லாம்
கனவாய் மாறிப் போனதடா- சிறு
தீவாய் வாழும் வாழ்க்கையதைத்
திடமாய்  பற்றிக் கொண்டோம்!



ஆறாமறிவைக் கொண்டு – நாம்
அடைந்து விட்டதென்ன?
வானில் பறக்கக் கண்டோம்
நிலவில் மிதக்கக் கண்டோம்
பூமிப் பந்து தன்னை –  நம்
கைப்பிடியில் கொண்டு வந்தோம்!


உலகை நெருக்கமாக்கி – நாம்
மனதால் விலகி நின்றோம்
அறிவால் உயர்ந்த வாழ்க்கை போதும் – இனி
மனதால் உயரக் காண்போம்
மனித நேயம் கொண்டு
மக்கள் இதயம் வென்று வாழ்வோம்!



# விழித்தெழு!

தகுதிகளைச்
சேர்த்துக்கொள்
பதவிகள் உன்னைத்
தேடிக் கொள்ளும்....

பொறுமையைப் பழகிக்கொள்
பெருமைகள்- உன்னை நாடிவரும்......



உனது கைகளின் வலிமை
மனதிலல்லவா உள்ளது!.....
மனதை உறுதிப்படுத்து....,
கைகள் தானாக முறுக்கேறும்.....!

வறுமை என்பது
வளமை தேடுதலின்
தொடக்கம் தான்......!

சோர்ந்து விடாதே!..
சோகம் பிரச்சினைக்குத்
தீர்வாகாது ....!

உனது பயணத்தை
நீயே நிர்ணயிக்காத போது,
உனது ரேகைகளாத்
தீர்மானிக்கப் போகிறது ?



விதி என்பது
வீணர்களின் கட்டுக்கதை...!

விதியே வாழ்க்கையைத்,
தீர்மானிக்குமெனில்
உனக்குக்
கைகள் எதற்கு?

– –0– –

# பின் நின்றவன்

## தாய்




சுமந்தாள் சாட்சியுண்டு!
பெற்றாள் சாட்சியுண்டு!
பாலூட்டினாள் சாட்சியுண்டு!
உணவூட்டினாள் நிலவே சாட்சியானது!

வலித்தால்; துடித்தாள்;
பிள்ளையே சாட்சியானான்!
அடித்தால் அணைப்பாள்;
அப்படியே உறங்கிப் போவாள்!

விழித்தால் சாட்சியாய் பிள்ளை;
மனத்தால் நிறைவாய்,
வாழ்ந்தே முடிப்பாள் – ஆதலினால்,
தாய்மை எனும் சொல்,
அகராதியில் அழகாய்;
இடம் கண்டது!

———



தொடர்கிறது........

# தந்தை!

முதலடி வைக்க,
தன் விரல் தந்து நடத்தினான்!
உலகம் வியக்கவில்லை!



நெஞ்சலே உதைத்தவனை;
கொஞ்சியே பார்த்தவனை;
பொழுது போக்கு என்றது உலகம்!



பிள்ளை பசியார உழைத்தான்!
வயிற்றுப் பிழைப்பு
என்றது உலகம் !– பிள்ளைக்கு,
வலித்தால் துடிப்பான்,
இருட்டில் முகம் புதைத்து;
கல் நெஞ்சு என்றது உலகம்!



அடித்தால்,
அணைக்க முடியாமல்;
துடித்தே கழிப்பான்,
உறங்காமல் இரவை!



மனதால் தளர்ந்து,
உடலால் சோர்ந்து,
வாழ்வதாய் எண்ணி
வாழாமல் முடிப்பான்!
ஏனோ தெரியவில்லை;
தாய்மைக்கு நிகராய்
தந்தைக்கு ஒரு சொல்
அகராதியில் கிட்டவில்லை!
———-0--------

# தடையை உடை!



தலை தாழ்த்தி வாழ்ந்திடாதே!
முகம் மறைய வாழ்ந்திடாதே!
புயலென வேதனை வந்தாலும்; - சிறு,
புன்னகையால்  அதை வென்று விடு!

மேகம் மறைப்பதாலே,
நிலவு தொலைவதில்லை!
துன்பம் சூழ்வதாலே,
வாழும் உரிமை போவதில்லை!


காலன் வரும் நேரம்,
நமக்குத் தெரிவதில்லை!
வாழ்க்கை சென்று சேறுமிடம்;
நமக்குப் புரிவதில்லை!

காலன் நெருங்கும் முன்னே
வாழ்ந்துப் பார்க்க வேண்டும்!
கடந்துப் போன வாழ்வை
திரும்பி பார்க்க வேண்டாம்



நடக்கப் போகும் வாழ்வைக்; - கைத்
தவற விட  வேண்டாம்!

# பயணம்




# பிறப்பு என்பது
மரணத்தின் தொடக்கம்!
மரணத்தை நோக்கியப்,
பயணமே வாழ்க்கை!

# வாழ்க்கை முறையே,
பயணத்தின் பாதை!
பாதையை,
அறிவால் தொட்டவன்  வெல்கிறான்!
உணர்வால் தொட்டவன் தோற்க்கிறான்!

# பிறந்த நாள் என்பது,
ஆயுளில் வருடம் கழிந்ததாய்ப் பொருள்!
மகிழ்ந்துத் துள்ள ஒன்றுமில்லை!
அசையாமல் படுத்தாலே போதும்!
மரணத்தை எட்டிவிடலாம் -  ஆனால் நீ
சருகாய் மட்டுமே பார்க்கப்படுவாய்!

# புத்தியும் சக்தியும் இணைத்துப்
பாதையை  செப்பனிட்டுச்  சென்றால்,- நீ;
சான்றோன் என்றல்லவா மதிக்கப்படுவாய்!
ஆசைகள் அற்று வாழ்வது வாழ்க்கையல்ல!
ஆசைகை அடக்கி வாழ்வதே வாழ்க்கை!
மரணத்தை நெருங்கும் போது தான் தெரியும்; - நாம்,
கடந்தப் பாதை சரியா தவறா என! - காலம்,
கடக்கும் முன் பாதையைத் திருத்திக் கொள்!



—— 0 -------


# முதுமை

காலூன்றி நடக்கும் போதே;
கடமையை செய்து விட்டால்,
கோலூன்றி நடக்கும் போது,
கவலைகள் ஏதுமில்லை!




பாலூட்டி வளர்த்தப் பிள்ளை;
தோள் கொடுத்து நிற்பானென,
ஈட்டியச் செல்வந் தன்னை;
எளிதாக போக்கி விட்டு,
மாற்று வழி அறியாமல்,
திகைத்து நிற்பானை;
முட்டாள் எனத் தூற்றும் உலகு!


கண்ணிரடில் ஒளி நீங்கும்!
கைக் கால்கள் துவண்டிருக்கும்!
மனமெல்லாம் இருண்டிருக்கும்!



முதுமை என்னும் நோய்;
தவறாமல் தாக்கிவிடும்!
தப்பிப் பிழைத்திடவே,
தரனியில் வழியில்லை!

இரத்தம் சுண்டுமுன்னே,
உழைத்து விடுச் சீராக!
மொத்தம் தீரும் முன்னே,
சேர்த்து விடுப் பணமாக!





# மனிதன்

( 12.11.20 )



ஓரடியாய் பிறந்தவன்;
இரடியில்  தவழ்ந்தவன்,
மூவடியில் நடந்தவன்,
நாலடியில் பயின்றவன்;
ஐந்தடியில்வாழ்ந்தே முடிக்கிறான்!
ஆறடியில் புதைந்தேப் போகிறான்!


இரட்டைக் காலால்
ஆட்டம் போட்டவன்;
எட்டுக் காலிலே,
போய்ச் சேர்கிறான்
ஈரெட்டு நாளில்,
மனதை விட்டும் மறைகிறான்!



பிறப்பின் பொருளும் தெரிவதில்லை!
இறப்பின் இரகசியம் புரிவதில்லை!
வாழும் காலம் மட்டும்;
வாகைச் சூடா மன்னன் போல,
வாழ்ந்துப் பார்க்கத் துடிக்கின்றான்!
மடிந்துப் போவோம் என்பதையும் மறக்கின்றான்!

காடுச் செல்லும் காலம் வரையில்,
கடமைச் செய்ய மறக்கின்றான்!
நோயில் வீழ்ந்து சாயும் வரையில்,
தேகம் காக்க மறக்கின்றான்!
அந்திக் காலம் முந்தும் வரையில்,
ஆண்டவனைத் தொழவும் மறுக்கின்றான்!

—0—





# ஜீவ காருண்யம் (15.11.20)





செல்லப் பிராணி என்பது,
கௌரவ முத்திரையாகிவிட்டது!
நாயும் பூனையும் பிள்ளைகளாகின!
ஜீவ காருண்யம் தழைத்தது - மகிழ்ச்சி;



உடல் நலன் காத்திட கால்நடை மருத்துவம்!
உரிமைகள் காத்திட புளூ கிராஸ் நிர்வாகம்!
தேடி சென்று அணைக்க பிராணி ஆர்வலர்;
மிகுந்து விடடது கால்நடைப் பாசம்,—மகிழ்ச்சி!

விலங்கினப் படைப்பு மனிதனைச் சார்ந்ததல்ல!
தற்சார்பே விலங்கினச் சிறப்பு! - அதன்,
வசிப்படம் பறித்து அடைக்கலம் தந்தது;
மனிதயினத்தின் மாபெரும் தவறு! - எங்கனம் மகிழ்வது?



மனிதனின் பாசத்துக்காய் ஏங்கும் மனிதக் கூட்டம்,
சருகுகளாய் தெருவெங்கும் சிதறிக் கிடக்கிறது!
பசியும் பிணியும் கண்ணீராய்ப் பெருகி ஓட,
ஏனடா மனிதா எனக் கேட்கத்தான் ஆளில்லை! -ஏதடா மகிழ்ச்சி?

வீட்டுக்கு வீடு உணவும் உறைவிடமுமாய்; நாயும் பூனையும்!
தெருவிற்குப் பத்துப்பேர் பட்டினியால்,
சுருண்டிருப்பார்; குப்பையுடன் குப்பையாய்!
நாயுண்ட மீதத்துக்காய் காத்திருப்பதுப் போல், - ஏதடா மகிழ்ச்சி?

ஒன்றைச் சார்ந்துத் தான் ஒன்று என்பது;
மனிதனின் படைப்பாகும்! - இதை அறிந்திட்டு,
வாழ்ந்திட்டால் மனிதயினம் தழைத்தோங்கும்!
விலங்கிடம் காட்டிடும் அன்பிலே ஒரு துளி போதும்!
மனிதயினம் பிழைத்திடும்! மரணமின்றி வாழ்ந்திடும்!



—0—

# பணம் (25.11.2020)




உழைப்பின் பலன்; பணம்!
உயர்வின் முதல், பணம்!
கள்வனின் குறி பணம்!
கயமையின் காரணம் பணம்!

உறவின் சங்கிலி பணம்!
பகையின் மையம் பணம்!
ஒட்டா உறவை; இணைக்கும் பணம்!
பிரியா உறவையும் பிரிக்கும் பணம்!





பலத்தின் முகமும் பணம்!
ஏழையின் ஏக்கமும் பணம்!
வெற்றியின் அளவீட்டில் பணம்!
தோல்வியின் துவக்கமும் பணம்!

இளமையில் ஊக்கமும் பணம்!
முதுமையில் நம்பிக்கையும் பணம்!
கருவறை நீங்கிடப் பணம்
மண்ணறைப் புகவும் பணம்!







# இயற்கை (27.11.20)




இளமையது முடிந்து விட்டால்,
முதுமையது தொடங்கி விடும்!
முதுமையது தொடங்கி விட்டால்,
மரணமது நெருங்கி விடும்!

இயற்கையிதைப் புரிந்துக் கொண்டால்;
இயல்பு நிலை விளங்கி விடும்!
இயல்பு நிலை விளங்கி விட்டால்,
வாழும் வகைத் தெளிந்து விடும்!

இளமையதின் வலிமையது;
முதுமையதில் இருப்பதில்லை!
வலிமையது இருக்கையிலே,
முதுமைக்கெனவும் வாழ்ந்து விடு!



உனதுடைமைக் கை மாறும்!
உனது நிலைத் தடுமாறும்!- நீ,
பற்றியக் கைப் பிடி தளரும்! - உன்,
காலடியில் மண் விலகும்!

தேகத்தைக் காத்துக் கொள்!
ரோகத்தை தடுத்துக் கொள்!
மனதுக்குள் உறுதிக் கொள்!
மற்றயவை யாவையுமே,
இறையவனாய்ப் பொருத்திக் கொள்!!



# வீடு

சின்னச் சின்ன காசாக;
சிறுக சிறுக சேர்க்கிறே,
பட்டா சிட்டாப் பார்த்து தான்,
பத்திரத்தை பதியறே!



வாட்டம் சாட்டம் பார்த்து தான்;
மச்சு வீடு  கட்டுறே,
நேரம் காலம் பார்த்துத் தான்;
வீட்டுக்குள்ளே நுழையுறே!

தவனைங்கிற பேரிலே;
வட்டி மட்டும் கட்டுற,
பட்டக் கடன் அப்படியே;
நிக்கிறதைப் பார்க்கிறே!



வேதனையில் சிரிக்கிறே;
தூக்கம் கெட்டு அலையுறே;
சொந்த வீட்டு ஆசையாலே;
எல்லாத்தையும் இழக்கிறே!

வயது முடிந்துப் போனதும்,
செய்த வேலையும் இழக்கிறே!
வந்தப் பணத்தை வச்சுத் தான்;
மொத்தக் கடனை அடைக்கிறே!

பனை மரமாய் வளர்ந்தப் பிள்ளை,
பார்த்து நீயும்  மெச்சுறே!
கல்யாணத்தைப் பண்ணித் தான்;
கண்  குளிர பார்க்குறே!



வாரிசங்குறே பேரிலே;
வீட்டை எழுதிக் கொடுக்கிறே!
கண்னை முழிச்சு பாக்குறே!
வெட்ட வெளியில் நிக்கிறே!
எட்டத் தூரம்பாக்குறே!
கானல் நீரைப் பார்க்குறே!!



# உறவுகள்



கண்ணில் காணும் மேகமெல்லாம்,
மழை  தரும் மேகமல்ல;
உன்னைச் சுற்றும் உறவுகள் எல்லாம் - உன்
நலன் நாடும் உறவல்ல!

காற்று வந்தால் மேகங்கள் கலைவதுண்டு,
வறுமை வந்தால் உறவுகள் பிரிவதுண்டு;
கரையை கண்டால் ஓடிவரும் அலையைப் போல,
காசைக் கண்டால் ஓடிவரும் உறவுமுண்டு!

உந்தன் துன்பத்தை பங்குக் கொள்ள;
இருவர் மட்டும் உணடெண்றால்,
உந்தன் இன்பத்தைப் பங்குக் கொள்ள - அந்த
இருவர் மட்டும் போதுமன்றோ!

உந்தன் நிழலாய் தொடர்ந்து வந்தால்,
நட்புக் கூட உறவாகும்!
உந்தன் நிழலில் தொல்லைத் தந்தால்,
உறவும் கூட பகையாகும்!




பார்த்துப் பார்த்து சேர்த்தப் பொருளை,
பாசத்தாலே இழந்தோருண்டு!
சேர்த்து சேர்த்து வைத்த உறவை;
வறுமையாலே பிரிந்தோருண்டு,

குறையற்ற உறவென்று மேதினியில் ஏதுமில்லை!
குறையினில் கண் வைத்து நிறையினை ஏற்றுக் கொள்!
பிறர் நலனை நாடுகையில் உன் நலனை மனதில் கொள்!
மாற்றமென்பது வருகையிலே உன்நிலையில் உறுதிக் கொள்!

# துரோகம்!

# துரோகம் என்பது,
நாம் நேசித்தவர்களின்;
பரிசாகும் போது,
மனம் வலிக்கத் தான் செய்யும்!




# புன்னகை என்பது;
வஞ்சத்தை,
மறைக்கும் போர்வையாகும் போது,
கொஞ்சம் எச்சரிக்கையும் தேவை தான்!

# நெஞ்சத்தை நெருங்கும் முன்,
கொஞ்சம் விலகி நின்றுப் பார்!
ஏமாற்றங்கள் காத்திருக்கலாம்!
கட்டியணைக்கையில் கவனமாயிரு!
பின்னால் கொடுவாள் இருக்கலாம்!

# ஏமாற்றுவது அவர்களுக்கு தொழிலானால்,
ஏமாறுவது உனது தவறுதானே?
பிடிபடும் வரை பாவங்கள்;
குற்றமாவதில்லை!

# குற்றங்கள் நிரூபிக்கப்படும் வரை,
தண்டிக்கப்படுவதில்லை!
தண்டிக்கப்பட்டவர்கள் எல்லாம்;
குற்றவாளிகள் இல்லை! - காரணம்,
குற்றங்கள் சாட்சிகளால் நிரூபனமாகின்றன!
உண்மைகளால் இல்லை!



மேலும் தொடர,
பகுதி 2—க்குச்
செல்லுங்கள்